Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tm12052026.25
Vol. 12, No. 05 (2026) 12 05 2026 336–346 TIRJTS-2026-0003

RESEARCH ARTICLE

சங்க இலக்கியத்தில் பாணர்கள் மன்னகளுடனும் மக்களுடனும் கொண்டிருந்த நட்புறவு

The friendly relationships that the bards (Pānars) had with kings and common people in Sangam literature

க. நிவேதா[1,*] iD, முனைவர். பா. ஜெயமேரி[2] iD

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்த்துறை, அரசு கலைக் கல்லூரி, பு. முட்லூர், சிதம்பரம்.

[2] உதவிப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, பு. முடலூர், சிதம்பரம்.

***Corresponding author:** க. நிவேதா, nivethakandaswamy07@gmail.com

ORCID iD: க. நிவேதா https://orcid.org/0009-0004-0489-6163 · முனைவர். பா. ஜெயமேரி https://orcid.org/0009-0006-2881-8068

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 10 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0003

Peer review
Double-blind peer review

Keywords
Bard (Pānar)
Friendship / Amity (Natpu)
King (Mannan)
Bardic Duty / Bardic Rites (Pānkadan)
People / Public (Makkal)

ABSTRACT

Bards (Pānars) of the Sangam era were hereditary oral singers. The Yazh (a traditional stringed instrument) was their primary musical instrument. Rather than living permanently in one place, they led a nomadic lifestyle. Like birds seeking ripe fruit, they moved from place to place in search of kings, patrons, and common people who provided them with food and clothing. Bards were not merely recipients of gifts given by kings, chieftains, and the public; they also acted as advisors in their lives.

Beyond royal courts, bards traveled to battlefields where they performed final rites and cremated the bodies of brave warriors who achieved martyrdom. Furthermore, they drank toddy alongside victorious kings, singing praises to celebrate their triumphs. Kings considered supporting bards to be their solemn duty. This research paper highlights how bards maintained strong friendly relationships not only with kings but also with society at large.

How to cite this article: க. நிவேதா, & முனைவர். பா. ஜெயமேரி (2026). சங்க இலக்கியத்தில் பாணர்கள் மன்னகளுடனும் மக்களுடனும் கொண்டிருந்த நட்புறவு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05), 336–346. https://doi.org/10.63300/tm12052026.25
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

சங்க காலத்து பாணர்கள் மரபு வழிப்பட்ட வாய்மொழிப் பாடகர்கள் ஆவர். பாணர்களின் முதன்மையான இசைக் கருவி யாழ் ஆகும். இவர்கள் ஓர் இடத்தில் நிலைத்து வாழக்கூடியவர்களாக அல்லாமல் நாடோடி வாழ்க்கையினை மேற்கொள்பவர்களாக விளங்கியுள்ளனர். பழுத்த பழத்தினை நாடிச் செல்லும் பறவைகள் போல உணவு, உடை வழங்கும் மன்னர்கள்,வள்ளல்கள், மக்களை நாடி செல்கின்றனர். பாணர்கள் அரசன்,வேந்தன், மக்கள் போன்றோர் வழங்கும் பரிசு பொருட்களை மட்டும் பெற்றுக் கொள்பவர்களாக இல்லாமல் அவர்களின் வாழ்க்கையிலும் அறிவுரை கூறுபவர்களாகவும் இருக்கின்றனர். பாணர்கள் அவைகளம் மட்டுமல்லாது போர்க்களத்திற்கும் சென்று அங்கு வீரமரணம் அடைந்த வீரர்களின் உடலை தீயிட்டு முறைப்படி இறுதி கடனும் செய்கின்றனர். மேலும் போரில் வெற்றி பெற்ற மன்னனுடன் சேர்ந்து கள்ளினை அருந்தி வெற்றியை போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர். மன்னர்கள் பாணர்களுக்கு செய்வதை தனது கடமையாக கொண்டுள்ளனர். பாணர்கள் மன்னர்கள் மட்டுமல்லாது மக்கள் சமூகத்துடனும் நல்ல நட்புறவு கொண்டவர்களாக விளங்கியுள்ளதை எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு கட்டுரை அமைகின்றது.

கலைச் சொற்கள்:

1.பாணர் 2.நட்பு 3.மன்னன் 4. பாண்கடன் 5.மக்கள்

முன்னுரை

தமிழரின் தொன்மையான வாழ்வியல்,பண்பாடு,அரசியல், பொருளாதரம் கலை மற்றும் சமூக உறவுகளை அறிவதற்கு சங்க இலக்கியங்கள் முதன்மையான வரலாற்று மற்றும் இலக்கிய சான்றுகளாகத் திகழ்கின்றன. இவ்விலக்கியங்களில் அக்காலச் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளும் அவர்களுக்கிடையேயான உறவுகளும் நுணுக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக இசை, பாடல், யாழ் போன்ற கலையுடன் தொடர்புடைய பாணர்களின் வாழ்வியல் சங்க இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. சங்க கால மன்னர்களுக்கும் பாணர்களுக்கும் இடையேயான உறவு ஒருதலைப் பட்சமான பரிசில் உறவாக மட்டும் அமையவில்லை. மன்னர்களின் புகழையும் பெருமையும் பாடிய பாணர்கள் அவர்களுக்கும் அறிவுரை கூறிய வாழ்க்கையை எடுத்துக்கூறியுள்ளனர். பாணர்கள் பொதுமக்களான தலைவன் தலைவி ஊடலை தீர்ப்பதற்காகவும் தூதுவனாகவும் சென்றுள்ளனர். பாணர்கள் தலைவன் தலைவி இருவரும் பழிக்கப்பட்டாலும் அவர்களுக்கு இடையேயான உறவு ஒருபோதும் முறிவதில்லை. இவ்வாறாக “பாணர் மன்னர்களுடனும் மக்களுடனும் கொண்டிருந்த நட்புறவை” இவ் ஆய்வு கட்டுரையின் மூலம் அறியலாம்.

பாணர்கள்:

பாணர் என்பவர்கள் தமிழ்ச் சமூகத்தின் தொடக்க நிலைப் பாடகர்களாக அறியப்பட்டவர்கள். மரபு வழிப்பட்ட வாய்மொழிப் பாடல்களைப் பாடும் இயல்பினர். யாழ் என்னும் இசைக்கருவியை இசைப்பவர்கள். அரசர்கள், வள்ளல்கள் பற்றிய புகழ்ச்சிப் பாடல்களைப் பாடிக்கொண்டு நிலம் முழுவதும் பயணித்தவர்கள். நாட்டில் பாடல்களைப் பாடிக்கொண்டும் அரசர்கள் புகழைப் போற்றிக் கொண்டும் அவர்களின் புகழைப் பாடிக்கொண்டும் ஆங்காங்கு திரிந்த ஒரு கூட்டத்தினர் பாணர் எனப்பட்டனர். இப்பாணர் குடும்பங்கள் அடுத்த உணவு எங்கு எவ்வாறு கிடைக்கும் என்பது அறியாமல் எப்பொழுதும் திரிந்த வண்ணம் இருந்தனர் என்று, ந. சுப்பிரமணியன் பாணர்கள் குறித்து குறிப்படுகின்றார்.

பண் இசைத்தவர்கள் பாணர் எனப்பட்டனர். பண்-பாண்-பாணர் என்றாகிறது." பாணர்-பாடினியர் காலம் என்பது தொல்பழங்கால மக்கள் சமூதாயத்தில் முதன்முதலில் இலக்கியம் தோன்றிய கால கட்டமாகும்" என்று வெ. வரதராசன் பாணர்களின் தோற்றம் குறித்து குறிப்பிகின்றார். பழங்காலகத்தில் பாணனே சிறப்பிடம் பெற்றவனாய்க் கருதப்பெற்றான். நிலம் முழுவதும் பயனித்ததால் தான் அறிந்த நிலவியல் தன்மைகளை மக்களுக்குப் பாடல்களாய்ப் பாடி வெளிப்பத்தினான்.

"பாணர் என்பதற்கு இசை பாடுவோர் அல்லது பண்பாடுவோர் என்பது பொருளாகும்"என்று வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். தன்னை புரக்கும் வள்ளல்கள் அரசர்களின் கொடைத்தன்மை, வீரம், வெற்றி, புகழ் முதலியற்றை யாழிசையுடன் வாழ்த்திப் பாடும் தன்மை பெற்றவர்கள். பாணர்கள் மரபு வழிப்பட்ட வாய்மொழிப் பாடல்களைப் பாடும் இசை குடியினராவர்.

பாணர்களின் ஆதரவாளர்கள்:

சங்க காலச் சமூக அமைப்பில் பாணர்களையும், அவர்கள் சார்ந்த குழவினரையும், பெருமன்னர்களும், குறுநில மன்னர்களும், வேளிர் தலைவர்களும், பொதுமக்களும் ஆதரித்து அவர்களுக்கான வாழ்க்கை ஆதாரங்களை அளித்துள்ளனர். அவர்களின் கலையைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். பெருமன்னர்கள் கரிகால் பெருவளத்தான், பாண்டிய மன்னன் தலையங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழன் நலங்கிள்ளி, அதியமான் நெடுமான் அஞ்சி, போன்ற பெருமன்னர்கள் பாண் மரபினரைப் பெரிதும் ஆதரித்துள்ளனர்.

நாஞ்சில் வள்ளுவன், பண்ணன், பாரி, பேகன், ஆய், நல்லியக்கோடன், ஆதனுங்கன், இளந்திரையன், நன்னன், வேண்மான், அவியன், தழும்பன், பிட்டன், போன்ற பல குறுநில மன்னர்களும், பேரூர் தலைவர்களும் பாணர்களின் பசித்தீர்த்து வறுமை போக்கிய வள்ளல்களாவர். மேலும் ஐவகை நிலமக்களும் பாண் குழுவினரை வரவேற்றுப் பசித்தீ நீக்கி அவர்களை ஆதரித்துள்ளனர்.

மன்னர்களுடன் பாணர்களின் நட்புறவு

பாணர் சங்க காலத்தில் மிகுந்த பெருமைக்கு உரியவர்களாக விளங்கினர். அவர்கள் மன்னர்களுடனும் வள்ளல்களுடனும் மிகுந்த நட்புறவுடன் விளங்கினர். கபிலர், பரணர், அரிசில்கிழார் போன்றோர் பேகனிடம் பரிசில் வேண்டி மட்டும் செல்லவில்லை. மாறாக அவனுடைய இல்லற வாழ்வில் ஒழுக்க நெறி தவறியவிடத்து அதனைச் சுட்டிக்காட்டவும் செய்துள்ளனர். அவனை நன்நெறிப்படுத்தவும் முயன்றுள்ளனர்.

வையாவிக் கோப்பெரும்பேகன் என்று போற்றப்படும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பேகன் தன் இல்லறமாண்பினை இழந்து பரத்தையிடம் சென்றுள்ளான். தன் மனைவியாகிய கண்ணகியாரைக் கைதுறந்தான். இந்நிலையை உணர்ந்த கபிலர் அவனை நன்னெறிப்படுத்த முயன்றுள்ளார். இதனை,

“வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று

நின்னும்நின் மலையும் பாடஇன்னா

இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்

முலையகம் நனைப்ப விம்மி

குழலினை வதுபோ லழுதனன் பெரிதே”(புறம். 143;11-15)

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன. உன்னையும் உன் மலையையும் வாழ்த்திச் சென்று உன் வாயிலில் நின்றேன். அப்போது அழுதுக்கொண்டு சிவந்த கண்களை உடையவளாகிய நின் மனைவி மிகவும் உன்னுடைய பிரிவினை தாங்கமுடியாமல் துயரம் உற்று அழுத வண்ணம் நின்றிருந்தாள் என்று பேகனுக்கு எடுத்துரைள்ளார். இதேபோன்று பேகனிடத்துப் பரணரும் இல்லற மாண்பினை எடுத்துப்பதனை,

" .... காந்தள்

முகைபுரை விரவின் கண்ணீர் துடையா

யாமவன் கிளைஞரேம் அல்லேம் கேள்இனி

எம்போ லொருத்தி நலனயந் தோன்றும்

வருஉ மென்ப வயங்குபுகழ்ப் பேகன்

ஒல்லென வொலிக்குத் தேரொடு

முல்லை வேலி நல்லூரானே"(புறம். 144; 8-14)

என்னும் வரிகள் கூறுகின்றன. பேகனின் பரத்தையொழுக்கத்தை கேள்வியுற்ற பரணரும் பேகனிடத்துக் கண்ணகியின் நிலையினை எடுத்துரைக்கின்றார். நாங்கள்

உன் கானகத்தைப் பாடினோம். அப்போது அங்கே இளமகள் ஒருத்தி அழுதுக்கொண்டிருந்தாள். உடனே நாங்கள் அவரைத் தொழுது நீங்கள் பேகனுக்கு உரிமையுடையோரோ? என்று கேட்டேன் அதற்கு அப்பெண் தம் கண்ணீரைத் துடைத்தவாரே எம்போல் ஒருத்தியின் நலத்தை விழைந்து நாள்தோறும் அவளுறையும் நல்லூர்க்குத் தேரேறி வந்து போகின்றானெனப் பலரும் கூறுகின்றனர் என்று உரைத்தாள் எனக் கூறுகின்றார். இவர்களைப் போலவே அரிசில் கிழாரும் பேகனிடத்து அவன் மனைவியைப் பிரிந்து வாழும் நெறிபிறழ்ந்த சூழலைச் சுட்டியுள்ளனர். இதனை புறநானூறு 146 மற்றும் 147 -ஆம் பாடல்கள் உணர்த்துகின்றன.

பேகனின் வாழ்வில் மாற்றத்தை கொண்டுவர அக்கால பாண்மரபினர் முயற்சித்துள்ளனர். தாம் பரிசில் வேண்டிச் செல்லும் மன்னர்களாக இருப்பினும் அவர்களின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வுக்காணும் அளவிற்குப் பாணர் பெரும் மதிப்பிற்குரியவர்களாக விளங்கியுள்ளனர். மேலும் அம்மன்னர்களிடத்துப் பாணர் மதிப்புடையவர்களாக விளங்கியது போன்று மன்னர்களும் பாணர்களிடத்து அன்புடையவர்களாக விளங்கியுள்ளனர்.

ஔவை அதியமானின் நட்பு உலகறிந்த ஒன்றாகும். ஔவையின் புலமையை விரும்பிய அதியமான், ஔவைக்குப் பரிசிலை நீட்டித்துக் காலம் தாழ்த்தினால். இதனால் வருத்தம் அடைந்த போதும் ஔவை தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டு தனக்குகுரிய பரிசில் எப்போதும் யானையின் துதிக்கையிடத்தே உள்ள கவளத்தைபோன்றது. எனவே எப்பொழுதேனும் பரிசிலைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பகருகின்றார். இதனை,

“அதியமான் பரிசில் பெறூஉங் காலம்

நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்

கோட்டிடை வைத்த கவளம் போலக்

கையகத் ததுவே பொய்யாகாதே” (புறம். 101;5-8)

என்னும் வரிகள் உரைக்கின்றன. இதேபோன்று மற்றொருமுறை சென்றபோதும் அதியமான் பரிசிலை நீட்டித்தான். ஔவை தன் மனக்கருத்தை அதியமானிடம் தெரிவிக்க எண்ணிப் பலமுறை முயன்று முடியாது போயிற்று. அப்போது அவர் அரண்மனை வாயிலோனிடம் சென்று "வாயிலோயே வாயிலோயே"(புறம். 206;1) எனத் தொடங்கும் பாடலிலும் உணர்த்துகிறது. வாயில் காப்பாளனே நீ எப்போதும் பரிசிலர் பரிசிற்கு வருந்தும் வாழ்க்கை உடையவர் என்பதை அறிந்து, அவருக்கு அவ்வாயிலை அடைப்பதில்லை. ஆயினும் என்னிடம் மட்டும் வாயில் அடைக்கின்றாய். இது நின் செயலன்று என்று அறிவேன். நின் தலைமகனான அதியமான் தன் தகவுடமையை அறியவேண்டும். இல்லையெனில், என் தரமறிய வேண்டும், ஆயினும் அறிவும்

புகழுமுடைய வேள்பாரி போன்றோர் இறந்தால், இவ்வளமிக்க உலகம் வறியதாகிவிடவில்லை. நாங்கள் எத்திசை செல்லினும் எங்களுக்குச் சோறு குறை கிடையாது. சோறு என்று தான் வேண்டுவது என எண்ணி எனக்கு விடைதர நீட்டிப்பது விழுமிதன்று என்று கூறுகிறார்.

ஔவை அதியமானிடத்து உரிமையோடு கூறுவதன் மூலம் அதியமான் ஔவையின் மீதுக்கொண்ட உயர்ந்த நட்புள்ளமும் ஔவை அதியன் மீது வைத்திருந்த நம்பிக்கையும், நட்பும், மதிப்பும் உணர்த்தப்படுகிறது. அக்காலச் சமூகத்தில் மன்னர்களுடன் பாணரும், பாண்மரபினரும் நல்ல நட்புறவும் கொண்டு விளங்குமளவு உயர்ந்த மதிப்பினைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாக விளங்குகிறது.

போர்களத்திலும் பாணர்

பாணர் பரிசில் வேண்டி மன்னரின் அவைக்களம் மட்டும் செல்லவில்லை அவர்கள் தம் மன்னரின் போர்ச்சிறப்பு பற்றியும், வெற்றி, வீரம் பற்றியும் பாடவேண்டிப் போர்க்களத்திற்கு சென்றுள்ளனர். மேலும் அவர்கள் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு இறுதிக்கடன் செலுத்துவதையும் தம் கடமையாகக் கொண்டுள்ளனர். இதனை,

"வெண்கோட்ட காளிறுஎறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்

கைவல்யாழ்ப் பாணர் கடன்இறுதி தன்று "(புறப். வெ. கொளு. 137; 1-2)

என்னும் வரிகள், உணர்த்துகின்றன. யாழினை இசைக்கும் பாணர் இரத்த வெள்ளம் பெருகும் சிவந்த போர்க்களத்திடையே பகைவரின் யானையைக்கொன்று தாமும் இறந்து வீழ்ந்து வீழ்ந்த தும்பை வீரர்களுக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடனைச் செய்து அவர்களுடைய புகழைப் பாடியுள்ளனர். இதற்குப் பாண்பாட்டு என்று புறப்பொருள் வெண்பாமாலை உணர்த்துகிறது. மேலும்,

“தளஇயல் தாய்புதல்வர் தாம்உண ராமைக்

களரிக் கனல்முழங்க மூட்டி-விளரிப்பண்

கண்ணினார் பாணர் களி(று)எறிந்து வீழ்ந்தார்க்கு

வீண்ணினார் செய்தார் விருந்து”(புறப். வெ. 137;1-4)

என்னும் இவ்வரிகளும் விளக்குகின்றன. போர்க்களத்தில் பகைவருடைய யானையைக் கொண்று தாமும் இறந்து வீழுந்தான் ஒரு தும்பை வீரன். அவனுக்குத் தேவர் உலகில் உள்ளோர் விருந்தளித்தார்கள். அவ்வீரனுடைய தளர்ந்த இயல்புடைய மனைவியும்,தாயும் புதல்வரும் போர்க்களத்தில் அவ்வீரன் இறந்ததை அறியாத முன்னரே பாணர்கள் அவரின் உடலுக்கு நெருப்பிட்டுப் புகழ் பாடல்களைப் பாடி இறுதிக்கடன் செய்தனர்.

மேலும் பாணர் போரில் பெற்ற வெற்றிக் களிப்பினை தாம் தலைவனுடன் சேர்ந்து கள்ளுண்டு மகிழ்ந்துள்ளனர். இதனைக்,

"கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்

…………………………………..

…………………………………..

அவனெம் மிறைவன் யாமவன் பாணர்"(புறம். 316;1-4)

என்னும் வரிகள் சுட்டுகின்றன. வேந்தன் ஒருவன் பகைவேந்தனுடன் போரிட்டு வெற்றி எய்தினான். பகை வேந்தன் அப்போரில் இறந்துட்டான். வெற்றி பெற்ற வேந்தனுடன் தானைத்தலைவரும் பிற சான்றோரும் சேர்ந்து கள்ளுண்டு மகிழ்ந்தனர். தன் மனைக்கு மீண்டு வந்த தலைவன் கள்ளை விடியற்காலையில் மிகவுண்டு அக்கள்ளை வாழ்த்தி உறங்குவோனாயினான். அவன்பால் சென்ற ஒரு பாணர் தலைவன் பரிசில் பெற்று வந்தான். அவன் வரும் வழியில் வேறு சில பாணர்களைக் கண்டு அவர்களிடம் மனையின் முற்றத்தில் தூங்குபவனே எங்கள் தலைவன். நாங்கள் அவன் பாணராவும் என்று கூறுகின்றான். இவ்வாறாக போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவர்களின் வீரத்தைப் பாடியும், அவர்களுக்கு இறுதிக் கடன் முறைப்படி நிறைவேற்றியும் பெரும்பொறுப்பு உடையவர்களாக அக்காலத்தில் மக்கள் சமூகத்தில் பாணர்கள் மதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வெற்றிக் களிப்பின்போதும் தன் தலைவனுடன் இருந்துக் கொண்டாடியுள்ளனர்.

இப்பாண்ர்கள் போர்களத்தில் மன்னன் பெற்ற பெருஞ்செல்வத்தையும் பாராட்டிப் பாடியுள்ளனர். இதனை,

"செங்களத்துச் செழிஞ் செல்வம்

வெண்டுறை யாழ்ப்பாணர்விளம்பின்று" (புறப்.வெ. கொளு.207;1-2)

என்னும் வரிகள் சுட்டுகின்றன.

"ஈண்டி எருவை இற(கு)உளரும் வெங்களத்து

வேண்டியாம் கொண்ட விறல்வேழம் வேண்டாள்

வளைகள் வயிர்இயம்பும் வாள்தானை வேந்தே

விளைகள் பகர்வாள் விலை" (புறம்.வெ.207;1-4)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன. சங்குகளும் ஊதுக் கொம்புகளும் முழங்க விளங்க வாளேந்திய வேந்தே முற்றிய கள்ளை விற்பவர் அதற்கு விலையாக நின்னிடமிருந்து பெற்றுக்கொண்டு வெற்றிக்களிற்றை விரும்பமாட்டார் என்று புகழ்கின்றனர்.

பாணர் இவ்வாறாக போர்க்களத்திற்குச் சென்று தம் மன்னனின் வீரம்,வெற்றி,புகழ், போர்த்திறம் போன்றவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளனர். எனவே பாணர் மன்னர்களுடன் அவைகளத்திலும், போர்க்களத்திலும், அவர்களின் மனத்திலும் முதன்மையான இடத்தை பெற்றிருந்தனர் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

மன்னரின் பாண்கடன்

பாணன், இசை மீட்டும் திறன், பாட்டுப்பாடும் திறன் கூத்து போன்றவற்றால் மன்னர்களாலும்,வேந்தர்களாலும் மிகவும் மதிக்கப்பட்டான். எனவே தான் கலையைப் போற்றும் மன்னர்கள் அக்கலையை வளர்ப்போரையும் போற்றிப் புகழ்ந்தனர். மேலும் மன்னர்கள் பாணனுக்கு செய்தலை தங்களின் கடமையாக கொண்டனர். என்பதனை,

ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய

ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல் (புறம்.201;14-15)

என்ற அடிகள் கூறுகின்றன. அக்கால மன்னர்கள் தம் ஆளுந்தன்மையை கடமையாகக் கொண்டு விளங்கினர். மன்னர்களின் கடமைகளுல் ஒன்றாக பாணனுக்கு செய்ய வேண்டிய முறைகளை முறைப்படிச் செய்தனர். அதன்படியே பாண்மரபினரைப் பெரிதும் போற்றினர். அவர்களின் இசையாற்றலில் மூழ்கித் திளைத்தனர். இதைப் போன்று,

“ பாண்கட னிறுக்கும் வள்ளியோய்

பூண்கட னெந்தையேரவலர் புரவே” (புறம்.?)

என்னும் வரிகளும் பகருகின்றன. பாணருக்குக் கொடுப்பதையேத் தமது கடையாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர் என்றும் அவர்கள் அவ்வள்ளல் தன்மையோடு கூடிய வெற்றிகளைப் பெற்று ஆட்சி செய்திமையால் பாணருக்கு இறைவனாகவே விளங்கினர் என்றும் அறிய முடிகிறது. பாணர் சங்க காலச் சமூகத்தில் மன்னர்களுடனும் மிகுந்த நட்புறவு கொண்டவர்களாவும் மன்னர்கள் போற்றும் மண்புடையவர்களாகவும் விளங்கினர். அவர்களின் இசையாற்றலால் அவைகளத்திலும் போர்க்களத்திலும் தம் முத்திரையைப் பதிவு செய்துள்ளனர். அவர்களின் இத்தகைய பணியானது சரித்திரம் உணர்த்தும் சான்றுகளாக அமைந்துள்ளன என்பது பெறப்படுகிறது.

மக்களுடன் பாணர்கள் கொண்ட நட்புறவு

பாணர்கள் மன்னர்களுடனும் மட்டுமல்லாது மக்களுடனும் நல்ல உறவினை மேற்கொண்டவர்களாக திகழ்ந்துள்ளனர். தலைவனின் தேவைகளை பூர்த்தி செய்யும் உதவியாளனாகவும் தலைவன் கூறும் செய்திகளைக் கொண்டுச் சேர்க்கும்

தூதுவனாகவும் விளங்கியுள்ளான். அவ்வேலைகளில் தலைவியாலும், தோழியாலும் பழிக்கப்பட்டாலும் தலைவனுக்காக அதனையேற்றுக் கொண்டு பொறுமையுடன் பாணன் இருந்துள்ளான். அதேபோன்று பாணன் தலைவனின் செயல்களால் வெறுக்கப்பட்டாலும், தலைவனுடன் மதிக்கப்படுகின்றவனாகக் காணப்படுகின்றான். இதனைத்,

“……………..துறைவற்கு நீயும்

கண்டாங்கு உரையாய், குணமோ, பாண!

…………………………………

………………………………..

பல்லான் கிழவரின் அழிந்தவிவள் நலனே?” (நற். 291;5-9)

என்னும் பாடலடிகள் மொழிகின்றன. பரத்தையிற் பிரிந்த தலைவன் விடுப்பவந்த பாணனை நோக்கித் தோழி பாணனே தலைவியின் நலமாவது அழிந்துப் போவதை நீ கண்கூடாகக் கண்டதை தலைவனிடத்து உரைக்கவில்லை. இது உனக்கு இயல்பாகுமோ கூறியிருந்தால் அவன் முன்னரே வந்து தலையளி செய்திருப்பான். நீ உள்ளவாறு கூறாமலயால் அவனும் வந்திலன். இவளது நலனும் அழிந்தது காண் என்று கூறிப் பாணனைத் தோழி பழித்துரைக்கின்றான்.

“ குருகுகொளக் குளித்த கெண்டை அயலது

……………………………………

………………………………….

ஒருநின் பாணன் பொய்யன் ஆக

உள்ள பாணர் எல்லாம்

கள்வர் போல்வரி நீ அகன்றிசி னோர்க்கே” (குறு. 127;1-6)

என்னும் வரிகள், உணர்த்துகின்றன. பரத்தையிர் பிரிந்து மீண்ட தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்க்கப் பாணனை அனுப்பினான். அப்பொழுது தோழி நின்னுடைய பாணன் முழுப்பொய்யன் அவன் அங்ஙனமாகலின் நின்னால் பிரியப்பட்ட மகளிருக்கு உலகத்தில் உள்ள பாணர் எல்லாம் கள்வர் போலவே காணப்படுவாராயினர் என்று தூற்றுகின்றாள்.

தோழி இவ்வாறு பாணனை தூற்றுவதன் மூலம் பாணனுக்கும் தலைவன்பாலுள்ள மதிப்பும் அவனால் அவன் கொண்ட பொறுமையும் உணர்த்தப்படுகிறது. இதனை போன்றே தலைவியும் பாணனைத் தூற்றுகின்றாள். இதனை,

“பாணன் பொய்யன் பலசூ ளினனே” (ஐங்கு. 43;4)

என்னும் வரியானது உணர்த்துகின்றது. பரதமை மேற்கொண்டு மீண்டு வந்த தலைவன் தலைவியின் ஊடலை தீர்பதற்காக பாணனைத் தூது அனுப்புகின்றான். அப்போது தலைவி நின்னைகக் காட்டிலும் நின்னுடைய பாணன் பொய் கூறுவதில் வல்லவன். அதனால் நீ கூறும் உரை நான் இனிக்கேட்டு மயங்கமாட்டேன் என்று பாணனை தலைவி தூற்றுக்கின்றாள். இதேப்போன்று,

"பண்பிலை மன்ற பாண விவ்வூர்

அன்பில கடிய கழறி

மென்புலக் கொண்கனைத் தாரா தோயே" (ஐங்கு.138;1-3)

என்னும் பாடலும் சுட்டுகின்றன. பாணனை தலைவி எள்ளி நகையாடுமாறு அமைந்துள்ளது. தலைவியின் ஊடல் தீர வேண்டிப் பாணனை அனுப்பினான் தலைவன். ஆனால் பாணன் செல்லும் முன்னமே தலைவன் இல்லத்திற்கு சென்று வாயில் வேண்ட தலைவியும் வரவேற்றுக் கொண்டாள். இதனை அறியாத பாணன் தலைவியின்பால் வந்து நிற்க அது கண்ட தலைவி அவனை எள்ளி நகையாடுகிறாள்.

தலைவனால் பலவாறு பழிச் சொல்லுக்கும், அவப்பெயருக்கும் தான் ஆளானபோதும் அதனை ஒருபோதும் எதிர்க்காமல் ஏற்றுக் கொண்ட பாணன் உயர்ந்த பண்பினனாக காணப்படுகின்றான். மேலும் பாணன் தலைவனால் பழிச் சொல்லுக்கு ஆளாகிபோதும், தலைவி தோழியால் முற்றிலுமாக வெறுக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் சில நேரங்களில் தலைவிக்காக தலைவனிடத்தில் தூது செய்பவனாகவும் பாணன் காணப்படுகின்றான்.

முடிவுரை

பாணன் சங்ககால மக்கள் சமூகத்துடனும் மன்னர்களுடனும் நன்மதிப்பினையும் நல் உறவினையும் பெற்றுத் திகழ்ந்தனர். பரிசுக்காக மட்டும் நாடிச்செல்லாது அவர்களின் அன்பு கொண்டவர்களாகவும் வாழ்ந்தனர். அவர்களின் அன்பு உண்மையானதாக இருந்தமையாலே மன்னர்களும் பாணர்களைப் போற்றி புகழ்ந்துள்ளனர். அவர்களின் புலமையை மட்டும் ஆதரிக்காது அவர்களின் அன்புள்ளத்தையும் ஆதரித்துள்ளனர். இதை போன்று பாணரும் ஏர்க்களம்,போர்க்களம்,அவைக்களம் என அனைத்திலும் உயர்ந்த மதிப்பினை உடையவனாக காணப்படுகின்றனர். சங்க காலம் காதல்,வீரம் என்ற இரண்டும் நிறைந்துள்ள காலம். எனவே பாணரும் தான் சார்ந்திருந்த சமூகத்தின் சூழலுக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் காதல்,வீரம் இரண்டிலும் தொடர்புடையவனாக விளங்கியுள்ளார். சங்க கால சமூகத்தில் பாணரின் வாழ்க்கை நிலை அவர்களின் கலையுணர்வோடு உச்சநிலையை பெற்றிருந்தது என்பது அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற்பட்டியல்

References

சுப்பிரமணியன்.ச. வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை குறுந்தொகை தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.

துரைசாமிப்பிள்ளை. ஔவை., சங்க இலக்கியம் எட்டுத்தொகை ஐங்குறுநூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2019.

துரைசாமிப்பிள்ளை. ஔவை., சங்க புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2017.

புலியூர்கேசிகன், நற்றிணை மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2019.

வரதராசன். வெ., தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும், பண்ணன் பதிப்பகம், சென்னை, 1973.

வித்தியானந்தன். சு., தமிழர் சால்பு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1985.